S. M. Fernando
(Opticians)
எமது ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்திலேயே இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்
காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 12.30 வரை இயங்குகிறது.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 3·50

எஸ். எம். பெர்னாண்டோ
எமது கிளை ஸ்தாபனம் எதுவும் வேறு எந்த இடத்திலும் இயங்கவில்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகாமை)
யாழ்ப்பாணம்

சுடர்: 5 பிரமோதூத ஆ புரட்டாதி மீ 28 உ ஞாயிற்றுக்கிழமை (14-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 24 UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 221

யுத்த நிறுத்தம் செய்ய அரசை நெருக்குங்கள்!

சர்வதேச சமூகத்திடம் உலகத் திருச்சபை வற்புறுத்து

ஜெனிவா, அக்டோபர் 14

யுத்தத்தை உடனடியாக நிறுத்தி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜெனிவாவில் இயங்கும் உலகத் திருச்சபைக் கவுன்சில் (World Council of Churches) சர்வதேச சமூகத்தைக் கேட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துக் கூறும் விதத்தில் அமைந்துள்ள அறிக்கை ஒன்றை அது வெளியிட்டுள்ளது அந்த அறிக்கையிலேயே இலங்கை அரசை நெருக்குமாறு உலக சமூகம் கேட்டுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசாங்கம் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக யுத்தம் நடத்துவதாகக் கூறிக்கொண்டு சிவிலியன்களையே அழித்து வருகிறது.

விமானத் தாக்குதல்கள்

தமிழ் மக்கள் அரசாங்கத்தால் மிகவும் கொடூரமாக நடத்தப்படுகிறார்கள். எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு அரசாங்கம் தமிழ் மக்கள் மீது விமானத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

சிப்பாய் பலி

கொழும்பு, அக். 14

வத்தாறுமூலையில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

மூன்று சிப்பாய்கள் அச்சம்பவத்தின் போது காயமடைந்தனர். (ஒ-எ)

மிதிவெடியில் சிக்கி காலில் காயம்

நேற்று மாலை 4 மணியளவில் சிறுத்தீவுக்கு கடவட்டை எடுக்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கினார்.

குருநகரைச் சேர்ந்த செபமாலை றிச்சேட் புஸ்பராசா [வயது 40] என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவர்.

இடது காலில் காயமடைந்த இவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-51)

யாழ். நகரில் சில இடங்களில் இடிபாடுகளை அகற்றும் பணி!

இராணுவ நடவடிக்கையால் அழிந்து நாசமாகி வனாந்தரம் போல் காட்சியளிக்கும் நகரின் சில இடங்களில் நேற்று இடிபாடுகளை அகற்றும் வேலைகள் நடந்தன.

குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் சோகமே உருவாக நின்று இந்த வேலைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

இதேவேளை —

நகரில் சில பகுதிகளில் நேற்று சேத மதிப்பீடு வேலைகளும் இடம்பெற்றன. [ஒ-5-6]

ஸ்ரீலங்கா கடற்படை சூடு! இந்திய மீனவர் உயிரிழப்பு

சென்னை, அக். 14

கச்சதீவு அருகே இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், ஒரு மீனவர் உயிரிழந்தார். மூன்று மீனவர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த மீனவர்கள் இராமேஸ்வரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று கச்சதீவு அருகே இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற ஸ்ரீலங்கா கடற்படையினர் மீனவர்களை அப்பகுதியில் இருந்து வெளியேறும்படி விரட்டி அடித்ததாகவும்-

அம் மீனவர்கள் வெளியேற தாமதமாகவே, கடற்படையினர் சுட்டதாகவும் சென்னையில் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

குழந்தையைக் காப்பாற்ற கிணற்றில் பாய்ந்த பேத்தி!

கிணற்றில் தவறி விழுந்த ஒன்றரை வயதுக் குழந்தையைக் காப்பாற்ற கிணற்றில் குதித்த வயோதிப பெண்கால் முறிந்த நிலையில் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டார். குழந்தை எதுவித காயமுமின்றிக் காப்பாற்றப்பட்டது.

இச்சம்பவம் புங்குடுதீவில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கிணற்றடியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை தவறிக் கிணற்றில் விழுந்ததை அவதானித்த குழந்தையின் பேத்தியாரான தி. சிவசங்கை (வயது 56) என்ற வயோதிப பெண் உடன் கிணற்றினுள் குதித்து குழந்தையைக் காப்பாற்றினார்.

ஆனால் அவரின் கால் முறிந்தது.

தற்போது இந்த வயோதிப பெண் மாவிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

ராணுவ நடவடிக்கைகளைத் தற்காலிகமாகத்தளர்த்தி உலக நாடுகளின் உதவியைப் பெற இலங்கை "சாதுரியமான" திட்டம்!

லண்டன், அக். 14

மாத இறுதியில் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நடைபெற இருப்பதை ஒட்டியே இலங்கை இராணுவத்தினர் வடபகுதியில் தமது நடவடிக்கைகளை சற்று தளர்த்தியுள்ளனர்.

- இவ்வாறு அரசியல் அவதானிகள் தெரிவித்திருப்பதாக பி. பி. ஸி நேற்று அறிவித்தது

மாத இறுதியில் நடக்கும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் அரசாங்கத்துக்கு பெரும் பண உதவி வழங்கும் திட்டங்கள் முன்வைக்கப்படவுள்ளன. கூட்டம் நடந்து முடிந்து பண உதவி கிடைப்பது உறுதியாகும் வரை வடக்கில் இராணுவ நடவடிக்கைகளைத் தளர்த்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாம்.

ராணுவ நடவடிக்கைகளைத் தளர்த்தி, அபிவிருத்திக்கு என்ற பெயரில் அதிக உதவியை உலக நாடுகளிடம் பெற இலங்கை அரசு சாதுரியமாகத் திட்டமிட்டிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதிய நிதி கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டாலே வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முடியும் என கூட்டுப்படைத் தலைமையகவட்டாரங்கள் அரசிற்கு ஆலோசனை கூறியிருந்தனவாம்.

வெளிநாடுகளிலிருந்து நவீன விலையுயர்ந்த ஆயுதளபாடங்களை வாங்கினால் தான் புலிகளை ஒழிக்க முடியும் என்றும் அதே வட்டாரங்கள் கருதுவதாக பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

"யாழ் நகரத்தை வழித்துத் துடைத்தால்தான் புலிகளைப் பலவீனப்படுத்தலாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாவற்குளம் தாக்குதலில் 'பவள்' வாகனம் சேதம்

யாழ்ப்பாணம், அக்.14

வவுனியா, பாவற்குளத்தில் நடந்த வெள்ளியன்று "பவள்" கவச வாகனத்தில் வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் ஆர்.பி.ஜி தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் "பவள்" கவச வாகனம் முற்றாகச் சேதமுற்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

"பவள்" வாகனத்தில் வந்த படையினர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

மட்டக்களப்பு ஊறணியில் இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

மட்டக்களப்பு ஊறணிஇராணுவ முகாமிலிருந்து கடந்த வெள்ளியன்று வெளியேறிய படையினர் மீது பிள்ளையார் கோவில் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

குச்சவெளி முகாம் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 14

கடந்த வியாழனன்று இரவு 9-30 மணியளவில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி கடற்படைமுகாம் மீது தாங்கள் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும்—

சேதவிபரம் குறித்து தகவல் ஏதும்கிடைக்கவில்லை என்றும்விடுதலைப்புலிகள்வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

நித்திரையில் இருந்த இளைஞர் மீது கத்திவெட்டு

இளவாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், அக். 14

நித்திரையில் இருந்தபோது இனந் தெரியாத நபர்களால் வெட்டப்பட்டதாகக் கூறப்படும் ஓர் இளைஞர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

இளவாலையில் நேற்றுமுன்தினமிரவு 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

செல்வேத்தி அன்ரன் மரியதாஸ் (வயது 26) என்பவரே கத்தி வெட்டுக்கு இலக்கானவராவார்.

சம்பவ தினம் பகல் ஒரு சிலருடன் தான் வாய்த் தர்க்கப்பட்டதாகவும்—

பின்னர் இரவு முற்றத்தில் படுத்து நித்திரையில் இருந்த போது நள்ளிரவு 11 மணியளவில் தமது தொண்டையிலும், மார்பிலும், வயிலும் யாரோ கத்தியால் வெட்டியதாகவும் அவர் சொன்னார்.

பிரஸ்தாப இளைஞர் படுகாயமுற்ற நிலையில தற்போது யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [உ-15]

யாழ். ஆஸ்பத்திரியின் திருத்த வேலைகள் நீடிக்கும்

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்திருக்கும் யாழ். போதனா வைத்திய சாலையின் திருத்த வேலைகளை செய்து முடிப்பதற்கு மேலும் ஒரு வார காலம் தேவைப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு நாட்கள் ஆஸ்பத்திரி திருத்த மற்றும் துப்புரவாக்கும் வேலைகள் நடைபெற்று வந்தன. இந்த நாட்களில் அப்பகுதியில் அரச படைகள் தாக்குதல் எதையும் நடத்தவில்லை என உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒரு வார காலத்துக்கு ஆஸ்பத்திரிப் பகுதியில் தாக்குதல் நடைபெறாது என உத்தரவாதம் அளிக்கப்பட்டதை அடுத்தே திருத்த வேலைகள் தொடர இருக்கின்றன. (ஒ-15)

புள்ளிவிவரங்கள் பேசுகின்றன

இதுவரை கப்பலில் வந்த உணவு பத்து நாட்களுக்கு மட்டுமே போதும்!

யாழ்ப்பாணம், அக். 14

கடந்த ஜூன்மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர், கடந்த நான்கு மாதங்களாக, ஒன்பது கப்பல்களில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அரசாங்கம் அனுப்பி வைத்த உணவுப் பொருள்கள் ஆகப் பத்துநாட்களுக்கே போதுமானவை!

இதனை நாங்கள் சொல்லவில்லை. யாழ்ப்பாணம்செயலகத்தில் பதியப்பட்டுள்ள புள்ளிவிவரங்களே இதனைப் பேசுகின்றன.

நீங்கள் ரூபவாஹினியின் இரவுச் செய்திகளைக் கடந்த சில மாதங்களாக கேட்கும் (பார்க்கும்) சந்தர்ப்பம் இருக்கவில்லை தமிழானாலும் சரி, சிங்களமோ ஆங்கிலமோ ஆனாலும் சரி, நாளாந்தம் வடபகுதிக்குக் கப்பல் மூலம் உணவுப் பொருள் அனுப்புவது சம்பந்தமாக ஒரு செய்தி வாசிக்கப்படும்.

ஒருநாள் உணவுப் பொருள் அனுப்பப்படும் என்ற செய்தி. அடுத்த நாள் கப்பலில் ஏற்றப்படுவதாகச் செய்தி மூன்றாம் நாள் கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பட்டதாக அறிவிக்கப்படும். நான்காம் நாள் கப்பல் உணவுப் பொரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன் நோக்கி ஷெல்

காங்கேசன்துறை, அக். 14

பலாலியில் இருந்து காங்கேசன்துறை மற்றும் அதை அண்டிய பகுதிகளை நோக்கி நேற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நண்பகலளவில் ஹெலி ஒன்றும் வட்டமிட்டு பரவலாக கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதேவேளை—

நேற்று முன்தினம் (வெள்ளி) இரவு பலாலி முகாம் பகுதியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன. (ஒ-68)

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு மிக விரைவில் மின்சாரம்

யாழ்ப்பாணம், அக். 14

கிளிநொச்சியில் இருந்து 33 கே. வி. மின் இணைப்பூடாக பெறப்படவுள்ள மின்சாரம் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு விநியோகிக்கப்பட இருக்கிறது.

இன்னும் இரண்டொரு தினங்களில் ஆஸ்பத்திரிக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுவிடும் என்று மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு ஆரம்பத்தில் பகலில் மட்டுமே மின்சாரம் வழங்கப்படும் என்றும் பின்னர் விநியோகம் இரவுக்கும் நீடிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

கிளிநொச்சியில் இருந்து பெறப்படவுள்ள மின்சாரத்தைக் கொண்டு முதலில் குடாநாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கே மின் விநியோகம் வழங்கப்பட. உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

குப்பிளானில் ஷெல் விழுந்து ஒருவர் கையை இழந்தார்!

மகளும், மற்றொருவரும் காயம்

யாழ்ப்பாணம், அக். 14

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுப் பகல் ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் குப்பிளானில் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவரது வலது கை துண்டிக்கப்பட்டு விட்டது. அவரது மகளும், மற்றொருவரும் படுகாயமடைந்தனர்.

மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையான நடேசபிள்ளை உதயகுமார் (26 வயது) என்பவரே கையை இழந்தவர் ஆவார். அவரது மூத்த மகளான மேனகா (6 வயது) மற்றும் பரமேஸ்வரி பத்மாசரன் (38 வயது) ஆகியோரே காயமடைந்த ஏனைய இருவரும் ஆவர்.

குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு முன்பாகவும், சன சமூக நிலையத்துக்கு அருகிலுமே ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (ஒ-15-5)

இளைய தலைமுறையினரிடையே இதயம் கவரும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

விற்பனைக்கு

பனைமரம், தீராந்தி, சீற், கதவு, யன்னல், இறில்கள் [ஸ்ரீல்] விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கைலாச கோவில், பின்வீதி, நல்லூர். [14444]

மிகவும் நல்ல நிலையில் உள்ள 36 H.P லிஸ்ட்டர் என்ஜின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந நடராஜமணி ஆசிரியர் மில் ஒழுங்கை, மல்லாகம். [14369]

கல்வி

புதிய கல்வி நிலையம் [கெங்காதரன், ஆஸ்பத்திரியடி] ஆண்டு 4, 5 பரீட்சை மாணவர்கள் விடைத்தாள்களை "இரத்தினபுரி" அரசடி [மக்கள் வைத்திய சாலைக்கு அருகாமை] கொக்குவில் மேற்கு [அனைக்கோட்டை - குளப்பிட்டி றோட்] என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளவும். ஏனைய மாணவர்களும் கற்கக்கவும். நிர்வாகி. [14453]

தேவை

இலுப்பை, வேப்பம் விதைகள் பெருமளவில் தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம். [சி/5302]

வைத்திய சேவை

Dr. C. C. S ராஜன் கிருஸ்ணா கிளினிக் அரசடி வீதி [பொம்மை வெளி] யாழ்ப்பாணம். [13893]

கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும். கோழித்தீன் விற்கப்படும். மூலதாரப் பொருட்கள் அரைத்துக் கொடுக்கப்படும். மீன்பிடி வலைக்கு பயன்படுத்தப்படும் கண்டல் பட்டை மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம். சிவா மில்ஸ் அன் இண்டஸ்ரீஸ், 46/1, பிறவுண் வீதி, 4 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (14402)

ரதி வோச் வேக்ஸ் (Rathy Watch Works)

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைக்காக தந்த மணிக்கூடு வகைகளை இல, 12. பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் பெற்றுக் கொள்ளவும். திருத்துதல் வேலைகளும் நடைபெறுகின்றன. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (யாழ் நகரில்மணிக்கூடுகள் திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்) (14401)

ஸ்ரார் வாச் வேக்ஸ்

மீண்டும் இயங்குகின்றது வாடிக்கையாளர்களே! உங்கள் கடிகாரங்களை விரைவாக மீட்டுக் கொள்ளவும். ஸ்ரார் வாச் வேக்ஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (14447)

பரிஸ் ரெக்ஸ்

105, அரசடி வீதி, தட்டாதெரு, பிரவுண் வீதி, சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (14446)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை சித்த மருத்துவத்துறை கைதடி

சித்த மருத்துவத் துறை மாணவர்களுக்கு 89-90 ஆம் கல்வி ஆண்டிற்கான விரிவுரைகள் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன. 1989 – 90 ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கானநேர்முகப் பரீட்சை சென்றயூன் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் சமுகமளித்த எல்லா விண்ணப்பதாரரும் நவம்பர் 5 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தேர்வுக் கிளையில் 89 - 90 ஆம் ஆண்டிற்கான சித்த மருத்துவத்துறை மாணவர்களாக பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர். விரிவுரைகளும்அன்றைய தினம் ஆரம்பமாகும். புதிய மாணவர்களுக்கான கடிதங்கள் கூடிய விரைவில்அனுப்பப்படும். தங்கள் விலாசங்கள் மாறுபட்டிருப்பினும் நேரடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தேர்வுக் கிளையில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

– பதிவாளர்

[சி-5303]

மல்லிகை வெள்ளிவிழா மலர்

மல்லிகை அலுவலகத்தில் கிடைக்கும். பாதுகாத்துப் பேணத் தக்கமலர் வெளிநாடுகளில் உள்ள உற்றவர்களுக்கு பரிசளிக்கலாம். நிறையப் பயன்படும். உங்களது ஞாபகமும் புதுப்பிக்கப்படும். முயன்று பாருங்கள். (14424)

TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo, Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank – Siva Studio அருகாமையில் (சி-5219)

பிரத்தியேக ஆங்கிலக் கல்வி

சகல தரத்தினருக்கும் பிரத்தியேக ஆங்கில வகுப்பு திறமையுள்ள ஆசிரியரினால் வீடு சென்று கற்பிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: செ. பாஸ்கரன், வேளாதோப்பு, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (14419)

ஹெலியிலிருந்து பத்திரிகைப் பொதிகள்

தென்மராட்சி, அக். 14 ஹெலியில் இருந்து வீசப்பட்ட கொழும்புப் பத்திரிகைகள் அடங்கிய பொதி அரிசி ஆலை ஒன்றுக்குள் விழுந்தது.

வியாழன் மாலை சாவகச்சேரியில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவதினம் சந்தை தினமாக இருந்த போதிலும் ஹெலி அடிக்கடி வட்டமிட்டதால் காலை 10.00 மணியுடன் சாவகச்சேரிச் சந்தை கலைந்தது.

அதேசமயம் வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் ஹெலியிலிருந்து கொழும்புப் பத்திரிகைப் பொதிகள் போடப்பட்டன. [இ-117]

மக்கள் வங்கியில் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், அக். 14 மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வெள்ளி முதல் ஜூலை மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்தார்.

வெள்ளி மட்டும் சுமார் 2 லடசம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டது. [ஒ-6]

எகிப்து சபாநாயகர் சுட்டுக் கொலை

கெய்ரோ, அக். 14 எகிப்து நாடாளுமன்ற சபாநாயகர் மச்பூப் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சபாநாயகருடன் அவரின் மெய்ப்பாதுகாவலர் மூன்று பேரும் மாண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

முஸ்லிம் போராளிக்குழு ஒன்றைச் சேர்ந்தவர்களே, தங்கள் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக, இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கூறப்பட்டது. [ஒ-எ]

ஒயில் அனுப்ப கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 14 யாழ் - மாவட்டத்தில் மின்விநியோகத்தை சீராக்க 150 பரல் டிரான்போமர் எண்ணெய் (ஒயில்) அவசரமாகத் தேவையாகஉள்ளது. உப-மின்நிலைய டிரான்ஸ்போமர்களுக்கு பாவிக்கும் இந்த ஒயிலை உடன் அனுப்புமாறு யாழ். அரச அதிபர் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மின்சாரசபைத் தலைவருக்கும், அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கும் இந்த கோரிக்கையை அவர் விடுத்துள்ளார். (ஒ-6)

விசேட அறிவித்தல்

1990 Dec, 91 Apr நடைபெறவுள்ள B. A, G. A. Q. பரீட்சைக்கான (வெளிவாரி) விண்ணப்பம்

★ பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இது வரை விண்ணப்பிக்க தவறிய மாணவர்கள் தமது பதிவேட்டு இலக்கத்தினைக் குறிப்பிட்டு பேராதனை பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

★ இது தொடர்பாக விபரங்கள் தேவைப்படின் 15-10-90 முதல் காலை 9 — 11 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

B. A, G. A. Q விரிவுரைகள் 20 – 10 – 90 முதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:– நேரில்

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[மக்கள் வங்கிக்கருகாமையில்]

(சி-5304)

விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 22 - 3 - 1933

உதிர்வு; 14 - 9 - 1990

டானியல் தேவசகாயம் [டீ.எஸ்.]

[யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூட பிரதம தொழில்நுட்பவியலாளர்- CHIEF M. L. T.]

உன் உருவம் மறைந்தின்று
ஒரு திங்கள் ஓடியதோ?
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலன் உனை அழித்திட்டான்
கடமையே பெரிதென்று
கருத்தோடு செயல்பட்டாய்!
உயிரான மனைவியுடன்
கண்ணான இரு மக்கள்
உன் பிரிவு தாங்காமல்
துடிக்கின்றார் பாரய்யா,
உற்றாரும் மற்றோரும்,
உனை எண்ணி ஏங்குகின்றார்:
உனக்காய் இறை அமைத்த
"நல்லாயன் இல்லத்தில்"
நிழல் போல் இருந்தெம்மை
நிதமும் காத்திடுவீர்;

இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 15 – 10 – 1990 திங்கட்கிழமை காலை 6, 30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்து, ஆறுதல் கூறியவர்களுக்கும், துணையாய் நின்று உதவியவர்களுக்கும், எமது நன்றியைக் கூறுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், உற்றார், உறவினர்.

20, புங்கங்குளம் வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். [14430]

மரண அறிவித்தல்

மா.பொன்னையா செல்வரத்தினம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னை நாள் ஆசிரியர் மா. பொ. செல்வரத்தினம் (M. P. Selvaratnam) 14-09-1990 வெள்ளிக்கிழமை முற்பகல் கொழும்பில் காலமானார்.

இவர் உரும்பராய் வடக்கு காலஞ்சென்ற பொன்னையா - சிதம்பரம் தம்பதிகளின் புதல்வரும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் முன்னை நாள் ஆசிரியை காலஞ்சென்ற திருமதி செல்வநாச்சியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் ஆன்ம சாந்திக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி காந்திமதி இராஜகோபால்
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (14438)

கண்ணீர் அஞ்சலி

திருமதி மாலினி நாகேஸ்வரன் (ஆசிரியர்)

தோற்றம்: 19-05-1960 மறைவு: 11-09-1990

மகளிர் கல்லூரியில் மாண்புடனே கல்வி பயின்று
மாமணியாய் சேவை புரிந்த மாலினியே
மாணவர்களுக்கொளி விளக்காய் திகழ்ந்த
மங்கையர் குல மாதரசே
கனிவு தரும் சொற்களினால் அனைவரையும்
கவர்ந்திட்ட கண்மணியே
காணாத தேசம் போன உன்னைக்
கண்ணீர்ப்பூச் சொரிந்து
கைகூப்பி நிற்கிறோம் அம்மா.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

உடுப்பிட்டி, (14449)

45 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி அன்னமலர் சிவறட்ணம்

மலர்வு: 7 – 8 – 1931 உதிர்வு: 31 - 8 - 1990

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த அம்மாவே! நீங்கள் மறைந்து இன்னும் எங்கள கண்முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தருகின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளை.

நாக்கியம்புலம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்; (14426)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

[முன்னாள் நிறைவேற்று பொறியியலாளர்- பெருந்தெருக்கள் திணைக்களம்]

தோற்றம்: 30 - 03 - 1915 மறைவு: 14 - 10 - 1987

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

283/15, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [14437]

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்

யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்பப் பிரிவு மாணவர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் ஊழியர்களின் கூட்டமொன்று 18 – 10 – 90 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, தொழில் நுட்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறும்.

மாணவர்களும், விரிவிரையாளர்களும், ஊழியர்களும் சமுகமளிக்கவும்.

எஸ். ஜெபநேசன்,
செயலாளர்,
(J.C.T.I. கவுன்சில்)

(சி/5507)

அறிவித்தல்

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலையமும் கைத்தறிப் புடவைகள் கொள்வனவு நிலையமும் இணுவில் கந்தசாமி கோவில் சந்திக்கு அருகிலுள்ள கட்டடத்தில் தற்பொழுது இயங்குகின்றது. வாடிக்கையாளர்களும் நெசவு நிலைய பொறுப்பதிகாரிகளும் இவ்விடத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட
புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில்.

[14442]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

பாடசாலையில் பாதுகாப்பு

நான்கு மாத இடைவெளியின் பின்னர், யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகள் நாளை மீண்டும் ஆரம்பமாகின்றன.

இது காதில் விழும்போது இனிக்கிறது. நெஞ்சில் நினைக்கும்போது மகிழ்ச்சி பிறக்கிறது. எங்கள் இளம் சந்ததியினரின் கல்வி பாழடிக்கப்பட்டுவிடுமோ-படிப்பறிவு இல்லாத ஒரு சமுதாயம் உருவாகிவிடுமோ என்று ஏங்கிய மனம் சற்று ஆறுதல் பெறுகிறது.

வடக்குத்தமிழர்கள்கல்வி-ஞானங்களில் சிறந்தவர்கள். அதனால்தான் அவர்கள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். தமக்கு உரிமைவேண்டி ஓர் அரசாங்கத்துடனேயே போராடும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள்—

கல்விதான் அவர்களது பிரதான பொருளாதாரமாக முதன்மை வகிக்கிறது. ஆகையால் அவர்களின் வயிற்றில் அடிக்க வேண்டுமானால் கல்வியில் கைவைக்க வேண்டும். அவர்களுக்குள்ள கல்வி வசதிகளை உடைக்கவேண்டும். தரப்படுத்தல், போதிய போதனா வசதிகளை வழங்காமல் தடுத்தல் ஆகிய நேர்முகத் தாக்கங்களைவிட, மறைமுகமாகவும் தாக்கங்களை ஏற்படுத்தவேண்டும்- என்று சிங்கள அரசாங்கங்கள் இன்று நேற்றல்ல எத்தனையோ ஆண்டுகளாகச்செயலாற்றிவருகின்றன.

இது விடயத்தில் அரசாங்கத்தை எப்பாடுபட்டேனும் கோற்கடிக்க வேண்டும். இதில் தமிழர் மத்தியில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது.

தமிழ்ப் பகுதிகளில் கடந்த நான்கு மாதங்களும் கல்வி இழந்துபோனமை, இப்பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குச் சமமானது. உடைமை இழப்புகளைவிடக் கூடுதலாக மதிப்பிடப்பட வேண்டியது.

எனவே இனி மேலும் தாமதியாமல் பாடசாலைகளை இப்போதாவது திறக்கமுடிவுசெய்ததை வரவேற்கிறோம். எனினும் இளம் பிஞ்சுகளின் பாதுகாப்பு மிக முக்கியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

குடாநாட்டில் பாடசாலைகள் ஆரம்பமாகிவிட்டன என்பது தெரிந்தாற்போல, விமானப் படையும், பலாலி இராணுவப் படையும், தமது குண்டு, ஷெல் தாக்குதல்களை நிறுத்தப் போவதில்லை.

எனவே பாடசாலைகளில் உரிய பாதுகாப்பு வசதிகளைச் செய்வதில் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

இது விடயத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, உதவ முடியும் என நாம் எண்ணுகிறோம். வைத்தியசாலைகள் தாக்கப்படாமல் இருப்பதற்காக விசேட குறீகள் இடுதல் மற்றும் விசேட ஏற்பாடுகளைச் செய்வது போல, பாடசாலைகளையும் படைகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றும் நடைமுறைகளை அமுல் செய்ய அது உதவலாம்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வேறு பாடசாலைகளில் சேர்ந்து பயில்வதற்கு வசதி செய்யப்பட வேண்டியதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த மொத்தம் உள்ள 2,45,000 மாணவர்களில் அறுபது சதவீத மானவர்கள் நிதிவசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் கல்வி இடைவெளி இல்லாமல் தொடர ஒழுங்குகளைச் செய்வது சகல தரப்பினர்களினதும் பிரதான குறிக்கோளாக இருப்பது அவசியம்.

காசோலை ஏற்கப்படுகிறது

யாழ்ப்பாணம், அக். 13

யாழ்.ஸ்ரான்லி வீதியில் இயங்கும்ஹற்றன் நஷனல் வங்கியில் வெள்ளி முதல் காசோலைகள் ஏற்கப்படுகின்றன.

வங்கியின் வாடிக்கையாளர்களிடமிருந்து கொழும்பு மற்றும் வெளிமாவட்ட வங்கிகளுக்குரிய காசோலைகள் ஏற்கப்படும் என்றும்-

யாழ். மாவட்டத்துக்குள் உள்ள வங்கிகளின் காசோலைகள் ஏற்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகவும் வங்கியின் முகாமையாளர் எம். நவரட்ணராஜா தெரிவித்தார். (இ - 6)

சர்வதேசப்பிரிவு நாளை முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், அக். 13

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையின் சர்வதேசப் பிரிவு நாளை முதல் இயங்க உள்ளது.

சர்வதேசப் பிரிவில் குவைத் நாடு தவிர்ந்த ஏனைய வெளி நாடுகளின் காசோலைகள் வங்கி உண்டியல்கள் என்பவற்றை வங்கிக் கிளையில் கணக்குவைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் திங்கள் முதல் வைப்பிலிட முடியும் என்று வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்தார்.

வைப்புக்கள் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு: ஆராய விசேட குழு வருகிறது

அத்தியாவசிய சேவை நாயகம் யாழ். அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், அக். 14

1987 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக உயிர், உடைமை இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக நேரில் ஆராய விசேஷ குழு ஒன்று இங்கு அனுப்பப்படவிருக்கிறது.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்தரத் வத்தை யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நஷ்ட ஈடு வழங்குவதில் உள்ள தாமதம் குறித்து அத்தியாவசிய சேவைகள் நாயகம் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலங்களில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது உயிர், உடைமை இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி 150 பேர் உயிர் இழப்புக்கும், 1400 பேர் உடைமை சேதத்துக்கும் நஷ்டஈடு கோரியிருந்தனர்.

இவர்களில் ஆறு பேருக்கு உயிர் இழப்புக்கும், 21 பேருக்கு உடைமை இழப்புக்கும் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

மீதியானவர்களுக்கு நஷ்டஈடு வழங்க விசேஷ குழு ஒன்று அந்த அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட உள்ளது.

விண்ணப்பதாரிகளை நேரடியாகச் சந்தித்து விவரங்கள் சேகரிக்கவும் அந்த ஊழியரின் திணைக்கள தலைவரின் ஆலோசனைகளைப் பெறவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 க்கு பிற்பட்ட பாதிப்புகள் குறித்து இதில் எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. [இ-30]

ஸ்ரீ. ல. சு. க. தலைமையிலான கூட்டணியும் பகிஷ்கரித்தது

கொழும்பு, அக். 14

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டிய அனைத்து அரசியல் கட்சித்தலைவர்கள் மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகள் கூட்டணியும் கலந்து கொள்ளவில்லை.

இதன் காரணமாக வடக்கு கிழக்கு மாகாண நிரந்தர இணைப்பு, வடக்கு-கிழக்கு அதிகாரப் பரவலாக்கல் ஆகிய விஷயங்கள் குறித்து எதுவித முடிவும் எடுக்கப்படாமல் மாநாடு முடிவடைந்தது.

இம்மாநாடு மீண்டும் இம் மாதம் 18 ஆம் திகதி கூட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இம் மாநாட்டை முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கூட்டணியும் பகிஷ்கரித்தது தெரிந்ததே! (இ - எ)

சுகாதார சீர்கேடுகளால் வயிற்றோட்டநோய் ஆபத்து

சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம். அக் 14

மக்கள் அதிகளவில் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் சுகாதார சீர்கேடு காரணமாக வயிற்றோட்ட நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. ந. கனகசபை எச்சரித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

அண்மைக்கால நிகழ்வுகளினால் மக்கள் ஆயிரக்கணக்கில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதனால் அவர்கள் மத்தியில் சுகாதாரம் பாதிக்கப்பட்டு வயிற்றோட்டநோய் பரவிவருவதாகவும் - இது சம்பந்தமான நோய்களால் சில உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயிற்றோட்டம் காரணமாக எவரும் இறக்கவேண்டிய நிலை இல்லை. கொதித்து ஆறிய நீரைப் பருகுதல் போன்ற சில பழக்க வழக்கங்களை நாளாந்தம் கவனத்தில் கொள்வதால் இந்த நோய்கள் வராது தவிர்க்கலாம்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-5]

ப.நோ.கூ.ச பிரச்சினைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், அக். 14

யாழ் - மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் பல்வேறுவகையான பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் செயலகத்தில் அரசஅதிபர் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நிவாரணம் வழங்கும்முறையில் உள்ள தடங்கல்நிலையை நீக்கி, சீரான விநியோகம் மேற்கொள்வது சம்பந்தமான கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், உதவி அரச அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். [ஒ-3]

சுன்னாகம் மின்சார நிலைய உபகரணங்கள் விரைவில்வரும்

உயர் அதிகாரி தெரிவிக்கிறார்

கொழும்பு, அக். 14

விமானத் தாக்குதலால் சேதமடைந்த சுன்னாகம் மின்நிலையத்துக்கு தேவையான உபகரணங்கள் கொழுபிதல் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து ஒரளவு சீரடைந்ததால் உபகரணங்களை அங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்'

இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

சுன்னாகம் மின் நிலையத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து அறிக்கை கிடைத்ததைத் தொடர்ந்து திருத்த வேலைகளுக்கான சகல உபகரணங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து ஒரளவு கிரடைந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் கிடைக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணத்துக்கு அவை அனுப்பிவைக்கப்படும் என்றும் மின்சாரம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மின்சாரசபை தயாராக உள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [இ-2-3]

இயக்கச்சி சந்தைப்பகுதியில் ஹெலியிலிருந்து வேட்டு

தென்மராட்சி, அக்.14

சந்தையில்கூடி நின்ற பொது மக்கள் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வியாழன் காலை இயக்கச்சியில் இச்சம்பவம் நடந்தது.

சந்தையில் நின்ற பொது மக்களும் வியாபாரிகளும் பதுங்கு குழிகளுக்குள் சென்றதால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

எனினும் இருகடைகள் சிறிது சேதம் அடைந்தன.

அதேசமயம் புலோப்பளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற மினிவானில் பயணம்செய்தவர்களை நோக்கியும் கிளாலியில் வைத்து ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (இ-117)

ஓய்வூதியக் கிளையில் ஊழியர் வருகை குறைவு

யாழ்ப்பாணம், அக். 14

யாழ். செயலகத்தின் பல பிரிவுகளிலும் ஊழியர்களின் வரவு கணிசமாக அதிகரித்துள்ளது. எனினும் ஓய்வூதியக் கிளையில் ஊழியர் வரவு மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது. (இ-5-6)

55 வயதுக்கு மேலும் சேவை நீடிப்பு

மாற்றமில்லை என்கிறார் மந்திரி

கொழும்பு, அக். 14

அரசாங்க ஊழியர்களுக்கு 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்று பரவியுள்ள வதந்தியில் எவ்வித உண்மையுமில்லை. இப்போது நடைமுறையில் உள்ள கொள்கையில் எந்த வித மாற்றமும் இல்லை.

பொதுநிர்வாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெல்டஸ் பெரேரா நாடாளுமன்றத்தில் மேற்கண்—வாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக் கிழமை நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சின் உத்தேச இளைப்பாற்று திட்டத்தின் படி 55 வயதுக்கு மேல் சேவையை நீடிக்கும் நடைமுறையில் எந்தவித மாற்றமும் இல்லை. அதிகாரிகளின் விருப்பம், அரசின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் 55 வயதுக்கு மேலும் ஊழியரின் சேவையை நீடிக்க முடியும்.

அரசாங்க சேவையில் தற்போதுள்ள பல அதிகாரிகள் இளைப்பாற விரும்பினாலும் அதற்குச் சட்டரீதியாக சில தடைகள் உள்ளன. அவற்றை அறிந்தே தமது விருப்பத்தின் பேரில் சேவையிலிருந்து இளைப்பாற வசதி செய்து கொடுக்க திட்டமிட்டுள்ளேன் - என்றார் அவர். (அ-3)

இளம் தம்பதியர் பசியால் தற்கொலை!

யாழ்ப்பாணம், அக் 14

பசிக்கொடுமை காரணமாக இளம் தம்பதியர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று தெரியவந்துள்ளது:

நாகபடுவான் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளது. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த நாச்சிக்குடாவில் இருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது அது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளம் வயதினரான கணவனும் மனைவியுமே பசிக்கொடுமை தாங்காமல் தற்கொலை செய்திருக்கிறார்கள்.

இச் சம்பவம் இவ்வாரம் ஆரம்பத்தில் நிகழ்ந்துள்ளது. தமது வயிற்றுப் பசியை போக்கிக்கொள்ள முடியாத இந்த உலகில் தாம் இருந்து என்ன பயன் என்ற தோரணையில் கடிதம் எழுதி வைத்து விட்டே அவர்கள் உயிர் நீத்ததாக அந்தக் கிராமத்தில் வைத்திய சேவை புரியச் சென்ற தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாகபடுவான் கிராமம் மிகவும் பின்தங்கியது. இந்த விவசாய கிராமத்தில் கடந்த நான்குமாதங்களாகதொழில் ஸ்தம்பித்தது. போக்குவரத்து வசதிகளும் குறைவு; அதனால் அரசாங்கத்தின் நிவாரண உதவி எதுவும் கூட அங்கு கிடைக்கவில்லை. உணவுப் பொருள்களுக்கு மிகப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மக்கள் பட்டிவிச்சாவை எதிர்நோக்குகிறார்கள்—என்றும் அந்த அதிகாரி சொன்னார். (ஒ-3)

● இவர்களுக்கு இன்னும் ஓய்வூதியமில்லை

யாழ்ப்பாணம், அக் 14

உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பட்டியல் வங்கிகளுக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் ஜூலை முதல் ஓய்வூதியம் பெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

தீவுப்பகுதியில் கைதான 71 பேர் நிலையை உடன் அறிந்து சொல்க!

அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 14

மண்டைதீவுப் பகுதியில் முகாமிட்டிருந்த ஸ்ரீலங்கா படையினர் கைது செய்த 71 பேர் நேற்று வரை விடுதலை செய்யப்படவில்லை.

அவர்களை விடுதலைசெய்ய ஆவன செய்யுமாறு மண்டைதீவு கிழக்கு கிராமசேவையாளர் என். சுந்தரராஜ் யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி,மண்கும்பான் கிராமங்களில் கைது செய்யப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படாத 71 இளைஞர்களின் பெற்றோர் விடுதலைசெய்யப்படாதவர்களின் விவரங்களை கிராமசேவையாளரிடம் பதிந்துள்ளனர். இந்த 71 பேருக்கும் என்ன நடந்ததோ என்று பெற்றோர் கவலையுடன் வாழ்வதால் அவர்களின் நிலை குறித்து பாதுகாப்பு அமைச்சிடம் அறிந்து தெரிவிக்குமாறு கிராமசேவகர் அரச அதிபரிடம் கேட்டுள்ளார். (அ-3)

சிங்களம் மட்டும் சட்டம்:

பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியருக்குச் சலுகைகள்

யாழ்ப்பாணம், அக். 14

சிங்களத் தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்குக் கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் அனுப்பப்பட்டுள்ள 36/89 இலக்க சுற்றுநிருபத்திலேயே அந்தச் சலுகைகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது;

தமிழ் மொழி அமுலாக்கம் சட்டம் அமுலான திகதியில் (23 - 12 - 88) இருந்து, சிங்கனத் தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சம்பள உயர்ச்சிகள் பாக்கியுடன் வழங்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் நியமான திகதியில் இருந்து வழங்கப்பட வேண்டும்;

இந்தசுற்றுநிருபம் மாகாண சபையால் மாவட்டத்தில் உள்ள அரச அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. [இ - 3]

முல்லைத்தீவு ஆசிரியர் சம்பளப் பிரச்சனை

யாழ்ப்பாணம், அக். 14

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சனை குறித்து பேச்சுக்கள் நடந்த கல்வி அலுவலக அதிகாரிகள் குழு ஒன்று திருமலை செல்ல விருக்கிறது.

கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படாத சம்பளத்தை பெறுவது சம்பந்தமான பேச்சுக்களை அந்தக் குழு மாகாணசபை கல்வி அமைச்சுடன் நடத்தும். [இ-3]

முல்லையில் தற்காலிக குடிசைகள் அமைக்கும் வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம், அக். 14

திருகோணமலை மாவட்டதில் இருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கு தற்காலிக குடிசைகள் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு, சுதந்திரபுரம், ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு ஆகிய பகுதிகளிலேயேஇந்தக்குடிசைகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

மழைக்காலம் ஆரம்பிக்கு முன்னர் குடிசைகளை அமைத்துமுடிக்க துரிதமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை 100 குடிசைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன என்றும் குடிசைகள் அமைக்கும் வேலைகளில் அகதிகள் ஈடுபடுத்தப்படுவதால் அவர்களுக்கு வருமானம் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 1600 குடிசைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது தெரிந்ததே. [இ-5-6]

கட்டணம் 250ரூபா

கிளிநொச்சி, அக். 14

கிளிநொச்சி - வவுனியா மினிபஸ் கட்டணமாக 250 ரூபாவே அறவிடப்படுகிறது அது தவறுதலாக 13 ஆம் திகதிய உதயனில் ரூ 2.50 என பிரகரமாகிவிட்டது. [இ]

விறகைத் தேடிஅலையும் ஆஸ்பத்திரித் தாதிகள்!

யாழ்ப்பாணம், அக். 14

வெளிநோயாளர் பகுதித் தாதிமார்கள் விறகு பொறுக்கச் செல்கின்றனர். ஊசிபோடுவதற்காக வரும் நோயாளிகள் அவர்கள் வரும் வரை காத்து நிற்க வேண்டி இருக்கிறது.

வலிகாமம் கிழக்கில் உள்ள அரசினர் வைத்தியசாலை ஒன்றில் தினமும் நடக்கும் சம்பவம் இது.

ஊசிபோடுவதற்காகபாவிக்கப்படும் உபகரணங்கள் தொற்று நிக்கப்படுவதற்காக வெந்நீரில் அவிக்கப் படுவது வழக்கம்.

தற்போது மின்சாரம் இல்லாததே இப்பிரச்சினைக்கு மூல காரணம் ஆகும். (இ - 15)

Digitized by noolaham foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

ஞாயிற்றுக்கிழமை 14-10-1990

4

தண்ணீரில் நஞ்சு! சகோதரர் மயங்கினர்!!

யாழ்ப்பாணம். அக். 14

அரைத்த அலரி விதை கலந்த நீரைப் பருகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகள் மயக்கமுற்றநிலையில் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று தாவடியில் இடம்பெற்றது

நேற்றுக் காலை அலரி விதையை அரைத்து விளையாடிய இரு குழந்தைகள் தாய் சாப்பிட அழைத்ததும் குடத்தினுள் கையை விட்டுக் கழுவிய பின்னர் சாப்பிடச் சென்றனர்

உணவருந்திய பின்னர் இரு சிறு பிள்ளைகளும் அவர்களது ஏனைய சகோதரரும், சகோதரியும் அந்தக் குடத்துநீரைப் பருகினர்

சிறிது நேரத்தில் நால்வரும் தொடர்ச்சியாக வாந்திஎடுப்பதை அவதானித்த குழந்தைகளின் பெற்றோரும் அயலவரும் உணவையும் நீரையும் பரிசோதித்தபோது நீரில் அரைத்த அலரி விதை இருப்பதை அவதானித்தனர்.

வாந்திஎடுத்த குழந்தைகள் பின்னர் மயக்கமுற்றனர்.

இந்தச்சம்பவத்தில் பேரின்பராசா என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த மஞ்சு (வயது 4), அவிற்றா (வயது 6), சுனேஸ்குமார் (வயது 15), சுனேந்திரா (வயது 17)ஆகிய நான்கு சகோதரர்களே மயக்கமுற்றனர். (உ 15)

ஹெலி தாக்கி இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், அக் 14

வலயம் பகுதியில் கடந்த வியாழன் மாலை இடம் பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமுற்றார்.

இராசதுரை சுதர்சன் (வயது14) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-15)

யாழ். நகரில் பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம் |அக்.14

புரட்டாதிச் சனிக்கிழமை களின் கடைசி நாளான நேற்று கோவில்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் சனீஸ்வரர் வழிபாட்டில் கலந்து கொண்டனர்

யாழ். நகரில் பெருமான் கோவில், வண்ணை வைத்தீஸ்வரர் கோவில் ஆகியவற்றில் பக்தர்கள் எள் எண்ணெய் எரித்து வழிபட்டனர். [ஒ 6-5]

பக்தையிடம் சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம், அக். 14

புரட்டாதிச் சனிக்கிழமையான நேற்று யாழ். பெருமாள்கோவிலில்பக்தர்கள்கூடியிருந்த வேளையில் பெண்மணி ஒருவரிடம் இருந்து இரண்டு பவுண் சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டது.

இது தொடர்பாக இரு இளம் பெண்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். (ஒ-6)

சபாநாயகரின் செங்கோலை தாங்கிச் சென்ற வாசுதேவ

நாடாளுமன்றத்தில் நடந்த கலகலப்பு!

கொழும்பு, அக். 14

ஐக்கிய சோஷலிசமுன்னணி எம். பி. திரு வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றச் செங்கோலை திடீர் என்று எடுத்துக்கொண்டு கம்பீரமாக நடந்தார். துரிதமாகச் செயற்பட்ட படைக் கலச் சேவிதர் செங்கோலை மீட்டு உரிய இடத்தில் வைத்தார்.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது

சம்பவம் வருமாறு:-

சபை ஒத்திவைப்பு வேளி நேரத்தின் போது ஸ்ரீ. ல. சு. கட்சி உறுப்பினர் திரு. எஸ். பி. திசாநாயக்க தான் கேள்வி ஒன்றை எழுப்ப சந்தர்ப்பம் கேட்டிருந்தாகவும். தனது கேள்வி முறை நேரத்தில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் அழைப்பின் பேரில் அவரைக் காணச் சென்றிருந்ததாகவும் எனவே இப்பொழுது அந்தக் கேள்வியை எழுப்ப தனக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் கேட்டார்.

அப்போது சபாபீடத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் திரு. ஆரிய பி. ரெக்கவ அதற்கு சந்தர்ப்பம் வழங்க முடியாது என ஒரேயடியாக மறுத்து விட்டார்.

இதை அடுத்து அப்போது சபையிலிருந்த ஸ்ரீ. ல. சு. கட்சி உறுப்பினர்களும், ஐ. சோ. முன்னணி உறுப்பினர் திரு. வாசுதேவநாணயக்கார ஆகியோரும் திரு எஸ் பி. திசாநாயக்கவுக்கு கேள்வி கேட்க அனுமதிவழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்

அது தொடர்பான தீர்ப்பைத் தான்ஏற்கனவேவழங்கி விட்டதாகக் கூறிய குழுக்களின்பிரதித் தலைவர் கேள்வி கேட்க இடமளிக்க மறுத்து விட்டார்.

இதை அடுத்து திரு வாசுதேவ நாணயக்கார உட்பட சகல ஸ்ரீ ல. சு. கட்சி எம். பிக்களும் எழுந்து வந்து சபாநாயகர் ஆசனத்துக்கு முன்னால் உள்ள நடைபாதையில் நின்று கொண்டு கேள்வி கேட்கச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனக் கோஷமிடத் தொடங்கினர் திடீரென திரு வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்ற பாரம்பரியச் சின்னமான செங்கோலை எடுத்துச் சுமந்து கொண்டு படைக்கலச் சேவிதர்நடப்பது போல் கம்பீரமாக சில அடிகளை முன்னெடுத்து வைத்தார்

இதைக் கண்ணுற்ற படைக்கலச் சேவிதர் பதற்றமடைந்தவாறு ஓடி வந்து செங்கோலை மீட்டு உரிய இடத்தில் வைத்தார். (இ)

பாம்பு கடித்து மரணம்

யாழ்ப்பாணம், அக். 14

பரந்தனில் நேற்று முன் தினம் இரவு பாம்புக்கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் போக்குவரத்து மற்றும் வைத்திய வசதிகள் இன்றி அநியாயமாக உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

ஊரியானைச் சேர்ந்த அருள் செல்லக்கிளி [வயது 13] என்பவரே உயிரிழந்தவர் ஆவார் [உ-15]

காணவில்லை

ஊர்காவற்றுறை மேற்த வீதியைச் சேர்ந்த செல்வன் ம. ரஞ்சித் ரொமேஷ் என்பவரை 28-09-90 முதல் காணவில்லை தகவல் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு அறிவிக்கவும்.

கா. சுப்பிரமணியம்
சின்னப்பா வீதி, நவாலி தெற்கு
மானிப்பாய். (14440)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

திரு. மாணிக்கவாசகர் கந்தையா

(நாவற்குழி, கைதடி, மறவன்புலோ முன்னாள் கிராம சேவையாளர்)

பிறப்பு : 7-3-1911 இறப்பு : 14-9-1990

இன்று காலை 10 மணிக்கு மறவன்புலோவில் அமைந்துள்ள எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

கைதடி.
(13898)

இங்ஙனம்
க மகேந்திரன்
(மகன்)

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் நவரட்ணம்

காரைநகர் அல்வின் வீதியைச் சேர்ந்தவரும் சுன்னாகம் சிந்தனாஸ் ஸ்தாபனத்தின் பங்காளருமாகிய ஆறுமுகம் நவரடணம் 12-10-90 அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகத்தினதும் ஆ. அன்னமுத்து ஆகியோரின் புதல்வரும், காலம் சென்ற சதாசிவம், சரஸ்வதி ஆகியோரின் மருமகனும். பராசக்தியின் அன்புக் கணவரும், காந்திபன். பிரதீபன், நதீபா ஆகியோரின் தந்தையும், குமாரசாமி [ஆசிரியர்]. கனகசபை (அன்னம்ஸ்), வேலாயுதபிள்ளை [ஏ. வி. பி [ரெக்ஸ்ரைல்ஸ்]. சந்திரசேகரம் [விஷ்ணுகரன்ஸ் பான்ஸிரெக்ஸ்), காலஞ் சென்ற நாகேஸ்வரி, டாம்பிராதேவி, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-10-90 அன்று சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : பராசக்தி
மனைவி

(14456

திரு. வைத்திலிங்கம் பரமலிங்கம்

திருநெல்வேலி சிவன்கோவிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் பரமலிங்கம் (இளைப்பாறிய யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்) அவர்கள் 13-10-1990 அன்று காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், திரு. கந்தையா அவர்களின் சகோதரரும், திருமதி பராசக்தி ஜெயானந்தன் (தொழில் நுட்பக் கல்லூரி, சம்மாந்துறை). திருமதி சுபத்திராதேவி மகேந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), திருமதி புஷ்பராணி கதிர்காமநாதன்)யாழ் தொழில் நுட்பக் கல்லூரி), திருமதி தயாநிதி ரட்ணசோதிராஜா, திருமதி தர்மாவதி மனோகரன் (உதவி வைத்திய அதிகாரி, மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்; திரு. க. ஜெயானந்தன் (கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), திரு. செ. மகேந்திரன் (நில அளவையாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்), திரு. R. ரட்ணசோதிராஜா, Dr. வி. மனோகரன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்; மிராளினி, திவாகரன், சுதாகரன், சங்கீதா, கஜேந்திரன், அபிராம், விக்னராஜா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(14-10-90) காலை 11.00 மணிக்கு சிவன் கோவிலடி இல்லத்தில் நடைபெறும்: இத்தகவலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
Dr வி. மனோகரன்.

[13899]

இ. வே. கார்த்திகேசு

(பிரபல வர்த்தகர், பசறை)

காரைநகரைச் சேர்ந்த திரு. E. V. கார்த்திகேசு அவர்கள் 13-10-90 [நேற்று] சனிக்கிழமை மாலை காலமானார். அன்னார் திருமதி கா. அன்னப்பிள்ளையின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற தங்கமுத்து, காலஞ்சென்ற E. V. ஆறுமுகம், திருமதி பார்வதி - நாகலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், திரு. கா: நாகேந்திரம் [பிரபல வர்த்தகர், பசறை], திருமதி நமசிவாயம் - சரஸ்வதி ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி நா: ராசேஸ்வரி, திரு. கு. நமசிவாயம் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தங்கோடை,
காரைநகர். [13900]

தகவல்:
குடும்பத்தினர்

இடமாற்றம்

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

257. கே கே எஸ். வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது 07. கைலாச பிள்ளையார் கோவில் பின் வீதியில் பெங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

எம்மிடம் பீற்றாட் விதைகள்
மலிவு விலையில் விற்பனைக்குண்டு

[14445]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

G. C E (O/L) (Lond.)
G. C E (A/L) (Lond.)
G. A. Q. (Peradeniya)

மேற்குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்குமான கூட்டமொன்று நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்

G. C. E. [A/L] [Lond]. G. C. E. [OL/] [Lond]

ஆகிய வகுப்புக்களில் புதிதாகச் சேரவிரும்பும் மாணவர்களும் சமுகமளிக்கவும்.

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை

[சி-5306]

தசாக கிருகயக்ஞ ஆத்ம சாந்தி வைபவ அழைப்பு

அன்புடையீர்,

6-10-90 அன்று சிவபதம் அடைந்த சே. பிதாம்பரக் குருக்கள் அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

15 10-90 திங்கட்கிழமை காலை 9 மணி: தசாகம்
16 10-9 செவ்வாய்க்கிழமை காலை 11 மணி : ஏகோதிஷ்டம், மாசொம்
17 10 90 புதன்கிழமை நண்பகல் 12 மணி : சபிண்டீகரணம்
18 10 90 வியாழக்கிழமை காலை 11 மணி: கிருகயக்ஞம்

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்கு கொண்டு பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

முத்துமாரி அம்மன் கோவில் இங்ஙனம்
அல்வாய் ச தியாகராஜக் குருக்கள்
(14455)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 298/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 10 1990 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

ஹெலியிலிருந்து கல் வீச்சு!

திருநெல்வேலி. அக். 14

கோண்டாவில் அன்னங்கைப் பகுதியில் நேற்று முன் தினம் ஹெலியில் இருந்து பெரிய கற்கள் வீசப்பட்டன.

இப்பகுதி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஹெலியில் இருந்து ஏதோ வீசப்படுவதைக் கண்டு பீதியடைந்து ஓடினர்.

பின்னர் வந்து பார்த்தபோது அங்கு பெரிய கற்கள் கிடப்பதை அவர்கள் கண்டனர். (ஒ-143)

ஊர்காவற்றுறை ஓய்வூதியம்; சுருவில் பாடசாலையில்

யாழ்ப்பாணம், அக் 14

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளையில் ஓய்வூதியம் பெறுபவர்கள் சுருவில் மரியாள் பாடசாலையில் அதனைப் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது

நாளை திங்கட்கிழமை காலை ஓய்வூதியம் காசோலையாக அங்கு வைத்து வழங்கப்பட இருக்கிறது.

வங்கி ஊழியர்களை தவறாது சமுகம் தருமாறு முகாமையாளர் பணித்துள்ளார். [ஒ-3]

கருத்தரங்கு

அரியாலைப் பிரதேச கலைஞர்களை உள்ளடக்கிய 'நிதர்சனம்' கருத்தரங்கு இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். நகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

அஞ்சலிக் கூட்டம்

1987 அக்டோபரில் கொக்குவில் கிழக்கு பிரம்படியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்று மாலை 4 மணியளவில் பிரம்படிச் சந்தியில் நடைபெற்றது. (ஒ)

உலக நாடுகளின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று அரசபடை அதிகாரிகள் நம்புகிறார்கள் எனவே மீண்டும் யாழ் நகரில் தாக்குதல்கள் தொடங்கப்படலாம்'' என்று பி.பி.ஸி தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது [உ-5]

யுத்தநிறுத்தம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே குண்டுவீசுவதாக அரசாங்கம் கூறினாலும், அதனால் அப்பாவிப் பொது மக்களேகொல்லப்படுகிறார்கள்.

கடந்த நான்கு மாதங்கால யுத்தத்தில், இலங்கை அரசாங்கப் படைகள் மூவாயிரத்து முந்நூறு (3,300) அப்பாவிப் பொதுமக்களை கொன்றுள்ளன அவர்களில் ஆயிரத்து 100 பேர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கடந்த நான்கு மாதங்களிலும் 17 ஆயிரம் பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைகளால் காயமுற்றுள்ளனர்.

படையினரால் கைது செய்யப்பட்ட 900 பேருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. அவர்கள் இன்னமும் காணாமற் போனவர்களாகவேகருதப்படுகிறார்கள்.

இலங்கை அரசாங்கம் மொத்தத்தில் இனஅழிப்பில் ஈடுபட்டுள்ளது எனவே யுத்தத்தை உடனடியாக நிறுத்திப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குமாறு சர்வதேச சமூகம் அதற்கு நெருக்குதல் கொடுக்கவேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கைக்கிறிஸ்தவ மதத் தலைவர் ஒருவரை திருச்சபை மேற்கோள் காட்டிய போதிலும், அவரது உயிர்ப் பாதுகாப்பைக் கருதி பெயரை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [அ]

இதுவரை கப்பலில்..

ளுடன் கடலில் செல்வதாகத் தகவல். ஐந்தாம் நாள் கப்பல் பருத்தித்துறையை அல்லது முல்லைத்தீவை அல்லது மன்னாரை அடைந்ததாகவும். ஆறாம் நாள் உணவுப் பொருள்கள் இறக்கப்படுவதாகவும் ரூபவாஹினி செய்தி சொல்லும் ஏழாம் நாள் கப்பல் கொழும்புக்கு அல்லது திருமலைக்குச் செல்வதும் ஒரு செய்தியாக்கப்படும்!

இவ்வாறு வடக்கே கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதாக வரும் செய்திகளைக் கேட்போர். நாளாந்தம் உணவுக் கப்பல்கள் வடக்கே செல்கின்றன என்று எண்ணுவார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த முக்கிய உணவுப் பொருள்களின் தொகை 6 ஆயிரத்தி 359 4 மெற்றிக் தொன் மட்டுமே.

யாழ்.செயலகப் பதிவுகளில் இருந்து திரட்டப்பட்டபுள்ளி விவரங்களைக் கீழே படியுங்கள்:-

யாழ். மாவட்டத்திலுள்ள சனத்தொகையினருக்கு, ஒரு மாதத்துக்கு 5,000 மெற்றிக் தொன் அரிசி, 3,000 மெற்றிக் தொன் மா. 2,000 மெற்றிக் தொன் சீனி ஆகிய உணவுப் பொருள்கள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு 3,000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் தேவை எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது

நாள் ஒன்றுக்குச் சராசரி 633 தொன் உணவுப் பொருள்கள் தேவையாக உள்ளன.

ஆனால் கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதியில் இருந்து நேற்று வரையான காலத்துக்கு ஒன்பது தடவைகள் கப்பல்கள் மூலம் கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் இங்கு கொண்டு வரப்பட்டன.

மொத்தத் தொகை

கப்பல்கள் மூலம் 2784 மெற்றிக் தொன் அரிசியும் 2205 மெற்றிக் தொன் மாவும், 1369 மெற்றிக் தொன் சீனியும் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த உணவுப்பொருள்களின் முழுத் தொகையான 6359 மெற்றிக் தொன் பொருள்களும் 10 நாட்களுக்கு மட்டும் போதுமானவையாகும்.

கொழும்பில் இருந்து பொருள்கள் ஏற்றப்பட்டவுடன் புனர்வாழ்வு அமைச்சால் பொருள்கள் விவரம், தொகை அடங்கிய பட்டியல் அனுப்பப்படுவது வழக்கம். அந்தப்பட்டியல் தொகைக்கும், பொருள்கள் இறக்கி முடித்த பின்னர் கணக்கிடும் தொகைக்கும் பெரும் வித்தியாசம் ஏற்படுவதாகவும் உதயனுக்கு அறியவருகிறது. (அ-3)

கர்நாடக முதல்வராக பங்காரப்பா?

பெங்களூர், அக் 14

கர்நாடக இந்திரா காங்கிரஸ் சட்டசபைக் குழுவின் புதிய தலைவராக திரு. பங்காரப்பா நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

மாநிலத்தின் புதிய முதலமைச்சராகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்திருக்கிறது.

இந்திரா காங்கிரஸின் மேலிட உத்தரவை ஏற்று முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய மறுத்ததிரு வீரேந்திரபட்டீலை, மாநிலகாங்கிரஸ் சட்டசபைக் குழு, கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் குழுத்தலைவர் பதவியில் இருந்து விலக்கியது.

காங்கிரஸில் ஏற்பட்ட உள் கட்சித் தகராறு காரணமாக, கர்நாடக மாநில சட்டசபை இயங்குவது இடைநிறுத்தம் செய்யப்பட்டு அங்கு ஆளுநர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது தெரிந்ததே. [ஒ எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org